# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2014 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, இ.அ.நி.கூ. வங்கி (நீக்கல் மற்றும் விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டம்

---

*(2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


2014, நவெம்பர் மாதம் 07 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 20.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

**2014 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, இ.அ.நி.கூ. வங்கி (நீக்கல் மற்றும் விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டம்**

[*2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.ஓ. 25/2014*

***இ.அ.நி.கூ. வங்கியை "டிஎவ்சீசீ வங்கி பீஎல்சீ" என்ற பெயரில் வரையறுக்கப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றாகப் பதிவு செய்வதற்கும் ; அத்தகைய பதிவு செய்கின்றமையின் விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகளுக்கு ஏற்பாடு செய்வதற்கும் ; (165 ஆம் அத்தியாயமான) இ.அ.நி.கூ. வங்கிச் சட்டத்தை நீக்குவதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, இ.அ.நி.கூ. வங்கி (நீக்கல் மற்றும் விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*(165 ஆம் அத்தியாயமான) இ.அ.நி.கூ. வங்கிச் சட்டத்தை நீக்கஞ் செய்தல்.*

**2.** (165 ஆம் அத்தியாயமான) இ.அ.நி.கூ. வங்கிச் சட்டம் அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியிலிருந்து (இதனகத்துப்பின்னர் "குறித்துரைக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நீக்கப்படுதல் வேண்டும். அத்தகைய தேதியானது, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிந்தாத ஒரு தேதியாக இருத்தல் வேண்டும்.

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இ.அ.நி.கூ. வங்கியை வரையறுக்கப் பட்ட பகிரங்கக் கம்பெனியாகப் பதிவு செய்தல்.*

**3.** (1) அமைச்சரானவர், இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் எந்நேரத்திலும், பணச் சபையினால் உரியமுறையில் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பக விதிகளை, குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து இ.அ.நி.கூ. வங்கியை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் "டிஎவ்சீசீ வங்கி பீஎல்சீ" என்ற பெயருடன் வரையறுக்கப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றாகப் பதிவு செய்யும்படி கம்பெனிகள் பதிவாளரைத் தேவைப்படுத்தும் பணிப்பொன்றுடன் சேர்த்து, அத்தகைய பதிவாளருக்கு அனுப்பலாம்.

(2) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் உள்ளது எது எவ்வாறிருப்பினும், கம்பெனிகள் பதிவாளர், (1) ஆம் உட்பிரிவின் கீழான பணிப்பைப் பெற்றதன் மேல் -

(அ) "டிஎவ்சீசீ வங்கி பீஎல்சீ" என்ற பெயரில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கூட்டிணைப்புச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் முயற்சியொன்றாக இ.அ.நி.கூ. வங்கியின் தொழிலைக் கையேற்றுக் கொண்டு நடாத்துவதற்கென (இதனகத்துப்பின்னர் "கம்பெனி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "டிஎவ்சீசீ வங்கி பீஎல்சீ" என்ற பெயரில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து வரையறுக்கப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்று கூட்டிணைக்கப்பட்டுள்ளதென வெளிப்படுத்துகின்ற கட்டளையொன்றை வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்.

*இ.அ.நி.கூ. வங்கியின் தொழில், கம்பெனிக்கு உரித்தாக்கப்படுதல்.*

**4**. குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து, இ.அ.நி.கூ. வங்கியின் தொழில், கம்பெனிக்கு முழுமையாக உரித்தாதல் வேண்டும்.

*நிலைபெயர் கால ஏற்பாடுகள்.*

**5**. குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து, வேறேதேனும் சட்டத்திலுள்ள ஏற்பாடு எவ்வாறிருப்பினும்,-

(அ) குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று இ.அ.நி.கூ. வங்கியின் பங்கு மூலதன மற்றும் பங்குக் கட்டுப்பணக் கணக்கின் வரவுக்குள்ள ஏதேனும் தொகை குறித்துரைக்கப்பட்ட தேதியிலுள்ளவாறாக கம்பெனியின் கூறப்பட்ட மூலதனமாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ள இ.அ.நி.கூ. வங்கியின் எல்லாப் பங்குதாரர்களும், குறித்துரைக்கப்பட்ட தேதியிலுள்ளவாறு கம்பெனியின்

பங்குதாரர்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், கம்பெனியில் அத்தகைய பங்குதாரர்களினால் வைத்திருக்கப்பட்ட பங்குகள், குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று இ.அ.நி.கூ. வங்கியில் அவர்களினால் வைத்திருக்கப்பட்டவற்றை எண்ணிக்கையில் ஒத்திருக்கின்றனவாகவிருத்தலும் வேண்டும் ; அத்துடன் இ.அ.நி.கூ. வங்கியினால் வழங்கப்பட்ட எல்லாப் பங்குச் சான்றிதழ்களும், அத்தகைய பங்குச் சான்றிதழ்கள் கம்பெனியினால் வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழ்கள் என்றாற்போன்று வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும் ;

(இ) இ.அ.நி.கூ. வங்கியினால் வழங்கப்பட்டவையும் மற்றும் குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று நிலுவையாகவுள்ளவையுமான எவ்வகையினவையுமான எல்லாப் பிணையங்களும் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து கம்பெனியால் வழங்கப்பட்ட பிணையங்களாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஈ) குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவி வகிக்கின்ற இ.அ.நி.கூ. வங்கியின் தவிசாளரும், பணிப்பாளர்களும், அலுவலர்களும், ஊழியர்களும் மற்றும் சேவையாளர்களும் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுமாறு கம்பெனியின் தவிசாளராகவும், பணிப்பாளர்களாகவும், அலுவலர்களாகவும், ஊழியர்களாகவும் மற்றும் சேவையாளர்களாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தவிசாளரும், பணிப்பாளர்களும், அலுவலர்களும், ஊழியர்களும் மற்றும் சேவையாளர்களும் குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று இ.அ.நி.கூ. வங்கியின் கீழ் அவர்களினால் துய்க்கப்பட்ட நியதி நிபந்தனைகளின்மீது கம்பெனியில் தொடர்ந்து பதவி வகித்தலும் வேண்டும் ;

(உ) குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையும் அல்லது பயனுள்ளனவாக இருப்பவையும் அவற்றுக்கு இ.அ.நி.கூ. வங்கி ஒரு திறத்தவராக உள்ளவையும் அல்லது இ.அ.நி.கூ. வங்கியின் சார்பில் இருப்பவையும் ஆன இ.அ.நி.கூ. வங்கியின் எல்லா ஒப்பந்தங்களும், உறுதிகளும், முறிகளும், உடன்படிக்கைகளும், உத்தரவாதங்களும், அற்றோணித் தத்துவங்களும், சட்டப் பிரதிநிதித்துவ அளிப்புக்களும் மற்றும் எத்தன்மையினவையுமான ஏனைய சாதனங்களும், குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுமாறு கம்பெனியினால் செய்துகொள்ளப்பட்ட அல்லது கம்பெனியின் சார்பில் அளிக்கப்பட்ட ஒப்பந்தங்களாகவும், உறுதிகளாகவும், முறிகளாகவும், உடன்படிக்கைகளாகவும், உத்தரவாதங்களாகவும், அற்றோணித் தத்துவங்களாகவும், சட்டப் பிரதிநிதித்துவ அளிப்புக்களாகவும் மற்றும் ஏனைய சாதனங்களாகவும் கருதப்படுதலும் வேண்டும் ;

(ஊ) வேறேதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் குறிப்பாக இல்லாதொழிக்கப்பட்டால் ஒழிய அல்லது பதிலிடப்பட்டால் ஒழிய, குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையும் அல்லது பயனுள்ளவையும், இ.அ.நி.கூ. வங்கிக்குப் பணச் சபையினால், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால், செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால், நகர அபிவிருத்தி அதிகாரசபையினால், வேறேதேனும் ஒழுங்குபடுத்தும் குழுவினால் அல்லது அதிகாரசபையினால், மாகாணசபையினால் அல்லது உள்ளூரதிகார சபையினால் அளிக்கப்பட்ட எல்லா அங்கீகாரங்களும் அல்லது உரிமங்களும், குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து கம்பெனிக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரங்களாகவும் அல்லது உரிமங்களாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(எ) குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று இலங்கை அரசாங்கம், அதன் திணைக்களங்கள் மற்றும் நிதிச்சட்டமுறையான குழுக்கள் உட்பட, இ.அ.நி.கூ.

வங்கிக்கும் இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள வேறெவரேனும் ஆளுக்கும் இடையே பேணப்பட்ட ஏதேனும் கணக்கு, அது அத்தகைய வங்கியின் சொத்தாகவிருப்பினுஞ்சரி அல்லது பொறுப் பாகவிருப்பினுஞ்சரி, குறித்துரைக்கப்பட்ட தேதியிலி ருந்து பயனுறுமாறு இ.அ.நி.கூ. வங்கிக்கும் அந்த வேறு ஆளுக்கும் இடையேயான கணக்குத் தொடர்ந்தும் இருந் திருப்பின் அதற்கு ஏற்புடையற்பாலதாக இருந்திருக்கக் கூடிய (எதிரீட்டுரிமைகள் உட்பட) அதே உரிமைகளுட னும் மற்றும் அதே கடப்பாடுகளுக்கும் நிலைப்பாடு களுக்கும் அமைவாகவும் உள்ள கணக்கொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கணக்குத் தொடர்பாக அத்தகைய வேறு ஆளினால் கொடுக்கப்பட்டதும், குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளதுமான அல்லது அத்தேதிக்குப் பின்னர் விடுக்கப்பட்டதுமான ஏதேனும் அறிவுறுத்தல், கட்டளை, பணிப்பு, ஆணை அல்லது அதிகாரம் இல்லாதொழிக்கப்பட்டால் அல்லது இல்லா தாக்கப்பட்டால் தவிரவும் அல்லது இல்லாதொழிக்கப் படும் அல்லது இல்லாதாக்கப்படும் வரையும், கம்பெனிக்கும் அந்த வேறு ஆளுக்கும் இடையேயான கணக்குத் தொடர்பாக ஏற்புடையதாதலும் பயனுள்ள தாதலும் வேண்டும் ;

(ஏ) எவரேனுமாளின் (தற்போதையதாயினுஞ்சரி அல்லது எதிர்காலத்தினதாயினுஞ்சரி அல்லது எதிர்பாராததா யினுஞ்சரி) தனிசுகளை அல்லது பொறுப்புக்களைக் கொடுப்பனவு செய்வதற்கான பிணைப்பொறுப்பாகக் குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று இ.அ.நி.கூ. வங்கியினால் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் ஈடு, பிணைப்பொறுப்பு அல்லது நட்டோத்தரவாதம், குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து கம்பெனியினால் வைத்திருக்கப்பட்ட ஓர் ஈடாக, பிணைப்பொறுப்பாக அல்லது நட்டோத்தரவாதமாகக் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய தனிசுகளையும் பொறுப்புக் களையும் கொடுப்பனவு செய்வதற்கான பிணைப் பொறுப்பாகக் கம்பெனிக்குக் கிடைக்கக்கூடியனவாத

லும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய ஈட்டினால், பிணைப்பொறுப்பினால் அல்லது நட்டோத்தரவாதத்தினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட பணங்கள் அவ்வாளுக்கான எதிர்கால முற்பணங்களை அல்லது அவ்வாளின் பொறுப்புக்களை உள்ளடக்குமிடத்து, அவ்வாளுக்கான எதிர்கால முற்பணங்களுக்கு அல்லது அவ்வாளின் பொறுப்புக்களுக்குக் கம்பெனிக்கான பிணைப்பொறுப்பு, குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முன்னர் இ.அ.நி.கூ. வங்கியினால் ஆன எதிர்கால முற்பணங்கள் அல்லது அதற்கான பொறுப்புக்கள் மூலம் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட அதே அளவாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஐ) வேறெவரேனுமாளுக்கு பிணை நிற்பவராகக் குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று இ.அ.நி.கூ. வங்கியினால் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் ஆவணத்தின், பண்டங்களின் அல்லது வேறு ஆதனத்தின் கட்டுக்காப்பு, குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுமாறு கம்பெனியின் ஆவணமொன்றாக, பண்டங்களாக அல்லது ஆதனமாக உள்ளதெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆவணம், பண்டங்கள் அல்லது ஆதனம் தொடர்பாக ஏதேனும் பிணை நிற்றல் ஒப்பந்தத்தின் கீழான இ.அ.நி.கூ. வங்கியின் உரிமைகளும் கடப்பாடுகளும், கம்பெனியின் உரிமைகளாகவும் கடப்பாடுகளாகவும் கருதப்படுதலும் வேண்டும் ;

(ஒ) குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று இலங்கையிலாயினுஞ்சரி அல்லது வேறெங்கேனுமாயினுஞ்சரி ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் மீது அல்லது பிணையங்கள் பரிவர்த்தனையின் மீது இ.அ.நி.கூ. வங்கியினால் வழங்கப்பட்ட எந்த வகையினவையுமான பங்குகளின் அல்லது பிணையங்களின் ஏதேனும் நிரற்படுத்துகை, குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுமாறு கம்பெனியின் அத்தகைய பங்குகளின் அல்லது பிணையங்களின் நிரற்படுத்துகையாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஓ) குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று ஏதேனும் சட்ட ஏற்பாட்டின் ஒழுங்குபடுத்தும் தேவைப் பாட்டின் நோக்கத்துக்காக அல்லது வேறு வகையாக இ.அ.நி.கூ. வங்கியினால் பேணப்பட்ட எல்லா ஒதுக்கு களும், குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறு மாறு அத்தகைய நோக்கத்துக்காக வைத்திருக்கப்பட்ட கம்பெனியின் ஒதுக்குகளாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஔ) குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உளதான இ.அ.நி.கூ. வங்கியின் –

(i) (காசு மீதிகள், ஒதுக்கு நிதிகள், முதலீடுகள், வியாபாரக் குறிகள், ஆக்கவுரிமைகள், உரிமங் கள், வைப்புக்கள் உட்பட) அசைவுள்ள, அசைவற்ற எல்லா ஆதனங்களும்;

(ii) வைப்புக்களும் எதிர் பாராப்பொறுப்புக்களும் உட்பட எல்லாப் பொறுப்புக்களும் ;

(iii) தொழிலில் அல்லது அதிலிருந்தும் மற்றும் வங்கித் தொழிற் சட்டத்தின் 76அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் பணச் சபை யினால் இ.அ.நி.கூ. வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமம் உட்பட, அத்தகைய ஆதனங்களிலிருந் தும் அத்தகைய பொறுப்புக்களிலிருந்தும் எழுகின்ற எல்லா உரிமைகளும், தத்துவங்களும், சிறப்புரிமைகளும், அதிகாரங்களும், கடப்பாடு களும், கடமைகளும், அக்கறைகளும் ; அல்லது

(iv) அவ்வங்கியின் ஏதேனும் ஆதனம் தொடர்பான அல்லது அதனோடிணைந்த எல்லாப் புத்தகங்களும் கணக்குகளும் ஆவணங்களும்,

குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து கம்பெனியின் ஆதனமாக, பொறுப்புக்களாக, உரிமைகளாக, தத்துவங்களாக, சிறப்புரிமைகளாக, அதிகாரங்களாக, கடப்பாடுகளாக, கடமைகளாக, அக்கறைகளாக, புத்தகங்களாக, கணக்குகளாக மற்றும் ஆவணங்களாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ங) இ.அ.நி.கூ. வங்கியினால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் சட்ட ஏற்பாட்டின்கீழ் தொடுக்கப்பட்டவையும் குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எத்தன்மையினவுமான எல்லா விண்ணப்பங்களும் வழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளும் அல்லது மேன்முறையீடுகளும், குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து கம்பெனியினால் அல்லது கம்பெனிக்கெதிராகத் தொடுக்கப்பட்ட விண்ணப்பங்களாகவும் வழக்கு நடவடிக்கைகளாகவும் அல்லது மேன்முறையீடுகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தவும்படலாம் ;

(ச) இ.அ.நி.கூ. வங்கியின் எவரேனும் ஊழியருக்கானதும் அல்லது முன்னைநாள் ஊழியருக்கானதும், குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளதுமான ஏதேனும் ஓய்வூதிய நிதியம், பணிக்கொடை நிதியம் அல்லது ஓர் ஓய்வூதியம், பணிக்கொடை அல்லது தொழிலுக்குப் பின்னரான நன்மை சம்பந்தப்பட்ட வேறு பொறுப்பு தொடர்பிலான நிதி இடப்படாத பொறுப்பு, குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து அத்தகைய ஊழியர் அல்லது முன்னைநாள் ஊழியர் தொடர்பிலான கம்பெனியின், விடயத்துக்கேற்ப, ஓர் ஓய்வூதிய நிதியமாக, பணிக்கொடை நிதியமாக அல்லது அத்தகைய பொறுப்பாக இருக்கின்றதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஞ) இ.அ.நி.கூ. வங்கி குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று அதன் ஊழியர்களின் நன்மைக்காகத் தொழில் ஆணையாளரினால்

அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சகாய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துநராகவிருக்குமிடத்து, கம்பெனியானது, குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து அத்தகைய ஊழியர்கள் தொடர்பில் அத்தகைய சகாயநிதியத்துக்கு உதவுதொகை செலுத்துநராகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஞ) குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ள இ.அ.நி.கூ. வங்கியின் எல்லா வரி வரவுகளும், மீளளிப்புக்களும், நட்டங்களும், சலுகைகளும், நிவாரணங்களும், நன்மைகளும், பொறுப்புக்களும் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து கம்பெனியின் வரி வரவுகள், மீளளிப்புக்கள், நட்டங்கள், சலுகைகள், நிவாரணங்கள், நன்மைகள், பொறுப்புக்கள் என்பனவாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ட) ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் இ.அ.நி.கூ. வங்கியின் சார்பாக அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தினால் பதிவுசெய்யப்பட்ட எல்லாத் தீர்ப்புக்களும், தீர்வைகளும் அல்லது கட்டளையும், குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுமாறு கம்பெனியின் சார்பாக அல்லது அதற்கெதிராகப் பதிவுசெய்யப்பட்ட தீர்ப்புக்களாக, தீர்வைகளாக அல்லது கட்டளைகளாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ண) குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று இ.அ.நி.கூ. வங்கியின் சார்பாக உள்ளவையும் மற்றும் வியாபாரச் சின்னங்கள், ஆக்கவுரிமைகள், மென்பொருள்கள் என்பன உட்பட புலமைச் சொத்துக்கான எல்லா உரிமைகளும், குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து கம்பெனியின் சார்பான அத்தகைய உரிமைகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

*(165 ஆம் அத்தியாயமான) இ.அ.நி.கூ. வங்கிச் சட்டத்தின் 10 ஆம் மற்றும் 14 ஆம் பிரிவுகளின் வரையறுக் கப்பட்ட ஏற்புடைமை.*

**6.** இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவால் (165 ஆம் அத்தியாயமான) இ.அ.நி.கூ. வங்கிச் சட்டம் நீக்கம் செய்யப்பட்டமை எவ்வாறிருப் பினும், மேற்சொல்லப்பட்ட நீக்கப்பட்ட சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினதும் மற்றும் 14 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகள், குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன்பின்னரும், அப்பிரிவுகளின் நியதிகளின்படி, இலங்கை அரசாங்கத்தினால், அவ்வாறு உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் முழுமையாக மீளச்செலுத்தப்படும் வரையும் அத்துடன் அதன் பின்னரல்லாதும், அத்தகைய சட்டம் ஒருபோதும் நீக்கஞ்செய்யப்பட்டிருக்கவில்லை என்றாற்போன்று தொடர்ந்தும் நடைமுறையிலிருத்தலும், முழுச் சட்ட வலுவும் பயனும் உடையதா தலும் வேண்டும். குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்னர் மேற்கூறப்பட்டவாறு உத்தரவாதம் அளிக்கப்பட்டதும் மற்றும் குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உளதாயிருப்பதுமான கடன் ஒவ்வொன்றும் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து, அவ்வாறு உத்தரவாதமளிக்கப்பட்டு கம்பெனி யால் திரட்டப்பட்ட கடன்கள் என்றாற்போன்று தொடர்ந்து உளதாயிருத்தல் வேண்டும்.

*எழுத்திலான சட்டங்கள் முதலிய வற்றுக்கான விளைவாந் தன்மையினவான திருத்தங்கள்.*

**7.** (1) குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து, ஏதேனும் சட்டத்தில், ஒழுங்குவிதியில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், சாதனத்தில், பதிவேட்டில், பங்குச் சான்றிதழில், ஆவணத்தில், உறுதியில், முறியில், உடன்படிக்கையில், உத்தரவாதத்தில், அற்றோணித் தத்துவத்தில், சட்டப் பிரதிநிதித்துவ அளிப்பில் மற்றும் எத்தன்மையினவையுமான ஏனைய சாதனங்களில் இ.அ.நி.கூ. வங்கிக்கான ஒவ்வொரு குறிப்பீடும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்குத் தோதானதாக அல்லது அவசியமானதாக இருக்கும்போதெல்லாம் கம்பெனிக்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஐந்தாம் பிரிவினதும் (1) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகள் பயனுள்ளனவாகவிருப்பதற்கு ஏதேனும் சட்டத்தின்கீழ் அல்லது ஒழுங்குவிதியின்கீழ் ஏதேனும் திணைக்களத்தினால், சட்ட நீதிமன்றத்தினால், நியாயசபையினால் அல்லது அரசாங்கத்தின் முகவர் நிலையத்தினால், மாகாண சபையினால் அல்லது உள்ளூரதிகார சபையினால் பேணப்பட்ட ஏதேனும் இடாப்பில்

அல்லது பதிவேட்டில் இ.அ.நி.கூ. வங்கி என்ற பெயரைக் கம்பெனியின் பெயருக்கு மாற்றீடுசெய்தல் அவசியமாதலாகாது ; ஆயின், எவ்வாறாயினும், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால் உண்மைப் பிரதியென அத்தாட்சிப்படுத்தப்பட்ட கூட்டிணைப்புச் சான்றிதழின் பிரதியுடன் அத்தகைய இடாப்பை அல்லது பதிவேட்டைப் பேணுவதற்குப் பொறுப்பாகவுள்ள ஆளுக்குக் கம்பெனியானது விண்ணப்பமொன்றைச் செய்யுமிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய பதிவேட்டில் அல்லது இடாப்பில் கம்பெனியின் பெயரைப் பதிலீடுசெய்தல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

**8.** (1) நான்காம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, இ.அ.நி.கூ. வங்கியின் தொழிலைக் கம்பெனிக்கு உரித்தாக்குவதனை வசதிப்படுத்தும் நோக்கங்களுக்காக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எந்தத் தேதியில் ஒழுங்குவிதிக்கு அங்கீகாரம் மறுக்கப்பட்டதோ அந்தத் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஒன்றிணைவும், ஒன்று சேர்க்கையும்.

**9.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அமைக்கப்பட்ட கம்பெனி, பணச்சபையினால் வழங்கப்பட்ட உரிமத்தின்கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றாகத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கென 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் VIII ஆம் பாகத்தின் ஏற்பாடுகளின்கீழ் வேறேதேனும் கம்பெனியுடன் ஒன்றிணையும் அல்லது ஒன்றுசேரும் பட்சத்தில், இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவு ஏற்ற மாற்றங்களுடன் தொடர்ந்தும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**10.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

**11.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

‘‘வங்கித்தொழிற் சட்டம்’’ என்பது, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டம் என்று பொருளாகும் ;

‘‘தொழில்’’ என்பது குறித்துரைக்கப்பட்ட தேதியன்றுள்ளவாறு, உரிமம்பெற்ற விசேட வங்கியொன்று என்றவாறாக இ.அ.நி.கூ. வங்கியினால் கொண்டுநடாத்தப்பட்ட தொழிலை உள்ளடக்கும் ;

‘‘கம்பெனி’’ என்பது, 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனி என்று பொருளாகும் ;

‘‘செலாவணிக் கட்டுப்பாட்டாளர்’’ என்பது, (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் பணச்சபையினால் தாபிக்கப்பட்ட, மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் தலைவர் என்று பொருளாகும் ;

*“இ.அ.நி.கூ. வங்கி” என்பது, (165 ஆம் அத்தியாயமான) காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான இ.அ.நி.கூ. வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இ.அ.நி.கூ. வங்கி என்று பொருளாகும் ;*

*“வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்” என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் தலைவர் என்று பொருளாகும் ;*

*“பணச்சபை” என்பது, (422 ஆம் அத்தியாமான) பணச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை என்று பொருளாகும் ;*

*“மாகாண சபை” என்பது, அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தியாயத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு மாகாண சபை என்று பொருளாகும் ;*

*“பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு” என்பது, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு என்று பொருளாகும் ;*

*“நகர அபிவிருத்தி அதிகாரசபை” என்பது, 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபை என்று பொருளாகும்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*